## சுருக்கம்

பொது விநியோகத் திட்டம் – கடலூர் மாவட்டம் – விருத்தாச்சலம் வட்டம் – மணக்கொல்லை தாய் நியாயவிலைக் கடையிலிருந்து சில குடும்ப அட்டைகளைப் பிரித்து, ராமநாதபுரம் பகுதியில் புதிய பகுதிநேரக் கடை அமைத்தல் – ஆணை வெளியிடப்படுகின்றது.

---

கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் (சிஏ2) துறை

அரசு ஆணை (டி) எண். 30

**நாள்: 30.01.2015**
**ஜய வருடம், தை 16,**
**திருவள்ளுவர் ஆண்டு 2045**
**படிக்க:**

1. அரசு ஆணை (நிலை) எண்.63, கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை நாள் 11.03.1997.
2. அரசு ஆணை (நிலை) எண்.214, கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை, நாள் 15.10.1998.
3. அரசு ஆணை (நிலை) எண்.147, கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை, நாள் 24.08.2006.
4. உணவுப்பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை ஆணையாளர் கடிதம் எண்.இ1/27873/2014, நாள் 30.12.2014.

– – – –

ஆணை:–

பார்வை 1–3ல் படிக்கப்பட்ட அரசாணைகளில் பகுதிநேர நியாயவிலைக் கடை துவக்குவதற்கான வழிகாட்டிக் குறிப்புகள் வரையறுக்கப்பட்டு, அதற்கான முழு அதிகாரமும் மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு வழங்கப்பட்டு ஆணையிடப்பட்டுள்ளன. இவ்வாறு வகுக்கப்பட்ட வரையறைகள் பொருந்தாதபோது பகுதிநேர நியாயவிலைக் கடை திறப்பது இன்றியமையாதது என மாவட்ட ஆட்சித் தலைவர்கள் கருதினால் அதற்காக அரசின் முன் அனுமதியைப் பெற வேண்டும் என மேற்குறித்த அரசாணைகளில் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

2) மேலே, 4–ல் படிக்கப்பட்ட கடிதத்தில், கடலூர் மாவட்டம், விருத்தாச்சலம் வட்டம், மணக்கொல்லை தாய் நியாயவிலைக் கடையிலுள்ள 475 குடும்ப அட்டைகளிலிருந்து 152 குடும்ப அட்டைகளைப் பிரித்து, 152 குடும்ப அட்டைகளுடன், ராமநாதபுரம் என்ற பகுதியில் ஊராட்சிக்கு சொந்தமான கட்டிடத்தில் புதிய பகுதிநேரக் கடை துவக்க அனுமதி கோரி

உணவுப்பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறை ஆணையாளர் கீழ்காணும் அரசின் நிபந்தனைகளைத் தளர்த்தி உரிய ஆணை வெளியிடுமாறு கேட்டுக்கொண்டுள்ளார்.

**அ) குடும்ப அட்டைகள் பிரிக்கப்பட்ட பின்பு தாய்க்கடையில் 500 குடும்ப அட்டைகள் இருக்க வேண்டும்.**

**ஆ) உத்தேசிக்கப்பட்டுள்ள பகுதி நேரக்கடை வாரத்தில் மூன்று நாட்கள் செயல்படவேண்டும்.**

3) உணவுப்பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறை ஆணையாளரின் பரிந்துரையை ஏற்று, ராமநாதபுரம் கிராமத்தில் உள்ள குடும்ப அட்டைதாரர்கள் மணக்கொல்லை அங்காடிக்கு 4.5 கி.மீ தூரம் செல்ல வேண்டியுள்ளதாலும், வெயில் மற்றும் மழைக்காலங்களில் அத்தியாவசியப் பொருட்கள் பெற சிரமப்படுவதாலும், அப்பகுதி குடும்ப அட்டைதாரர்களின் நலன் கருதி, மேலே, பத்தி 2ல் குறிப்பிட்டுள்ள அரசின் நிபந்தனைகளைத் தளர்த்தி கடலூர் மாவட்டம், விருத்தாச்சலம் வட்டம், பாலக்கொல்லை தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கத்தின் கீழ் செயல்படும், மணக்கொல்லை தாய் நியாயவிலைக் கடையிலுள்ள 475 குடும்ப அட்டைகளிலிருந்து, 152 குடும்ப அட்டைகளைப் பிரித்து 152 குடும்ப அட்டைகளுடன் ராமநாதபுரம் என்ற பகுதியில் ஊராட்சிக்கு சொந்தமான கட்டிடத்தில் வாரத்தில் இரண்டு நாட்கள் மட்டும் செயல்படும் வகையில் புதிய பகுதிநேரக்கடை துவக்க அனுமதி அளித்து அரசு ஆணையிடுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

**முகம்மது நசிமுத்தின்,**
**அரசு முதன்மைச் செயலாளர்.**

பெறுநர்
ஆணையாளர்,
உணவுப்பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை,
சென்னை–5
நகல்:–கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர், சென்னை–10.
மாவட்ட ஆட்சித் தலைவர், கடலூர் மாவட்டம்.
இணைப்பதிவாளர், கடலூர்மண்டலம், கடலூர்
உதிரிகள்/இ.கோ.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்.